ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

फलमलमशनाय स्वादु पानीयतोयं
क्षितिरपि शयनार्थं वाससे वल्कलञ्च ।
नवधनमधुपानभ्रान्त सर्वेन्द्रियाणां
अविनयमनुमन्तुं नोत्सहे दुर्जनानाम् ॥

பசியால் சிரமமேற்படுங்கால் உண்பதற்கு பலங்கள் போரும். தாகவிடாய்தீர்க்க மிகவும் ருசியுள்ள நீர் போரும். படுத்துறங்குவதற்கு பூமியிருக்கின்றது. உடுப்பதற்கு மரயுரிவி கிடைக்கும். இவைகளே போரும். ஸமீபகாலத்தில் கிடைத்தபொருளென்று பெயர்வாய்ந்த மதுவையருந்தியதால் தனக்கு வசமில்லாத சகலமான இந்திரியங்களையுடைய துர்ஜநங்களுடைய கெட்டநடத்தையை அநுஸரிப்பதற்கு நான் திருப்தியுள்ளவனாக இல்லை.

மிகவும் தரித்திரதசையையடைந்த ஒருவர் பூர்வஜந்மத்தில் செய்த புண்யவசத்தால் வைராக்கியத்தையடைந்து அறிவிக்கிறதாவது, என் சரீரரக்ஷணத்தைப் பெரிதாய்க் கருதி புதிதாய் சம்பாதிக்கப்பட்ட பொருளினால் மதிமயக்கங்கொண்டு கார்யம் அகார்யம் என்கிற பகுத்தறிவு குன்றியவர்களான செல்வவந்தர்களை நான் அநுஸரிக்கமாட்டேன். என் சரீரவிருத்தியை பிறரை அபேக்ஷிக்காமல் நடத்திக்கொள்ளும்படி பழம், தீர்த்தம், பூமி, வல்கலம் முதலியசாதனங்களை பகவான் ஏற்படுத்தியிருக்கிறார். அவைகளே போதுமானவை என்பதே. இதனால் யாவரும் பிறரை எதிர்பாராமல் தன் ஜீவனத்தை நடத்திக்கொள்வதே சிறந்ததென்றும் அவ்விதமில்லாமல் பிறரிடம் சென்றால் பலவித அவமானம் நேரிடுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்தஸாரம்.

(௪௨0-வது பக்கத்தொடர்ச்சி.)

3. சார்வாகர்களுள் மற்றும் சிலர் கருதுகின்றார்கள்.

அன்னமயமான இந்த ஸ்தூலசரீரத்தை ஆத்மாவென்று சொல்லுவது தப்பு.

देह आत्मा कथन्नुस्यात् परतन्त्रोह्य चेतनः ।
इन्द्रियैश्चाल्यमानोयं चेष्टते नस्वतः क्वचित् ।
आश्रयश्चक्षुरादीनां गृहवद्गृहमेधिनाम् ॥

பரனுக்கு அதீனமாயும், ஜடமாயுமிருக்கும் தேகம் எப்படி ஆத்மா வாகும்? இந்திரியங்களால் ஆட்டிவைக்கப்பட்டு இங்குமங்கும் சலிக்கின்றது. தானாக ஒரு அடிகூடச் செல்லச் சக்தியற்றது. நேத்திரம் முதலான இந்திரியங்களுக்கு இது கிருகஸ்தர்களுக்கு வீடுபோல் இருப்பிடமாயிருக்கின்றது. அன்றியும்,

बाल्यादिनानावस्थावान् शुक्लशोणितसम्भवः ।
अतः कदापि देहस्य नात्मत्वमुपपद्यते ॥

இந்த ஆத்மாவானவன் சுக்லம், சோணிதம் இவைகளாலுண்டா யிருக்கிறான். பால்யம், யௌவநம் முதலிய பல அவஸ்தைகளை யுமடைகிறான். ஆகையால் ஒருகாலும் இவனுக்கு ஆத்மத்வம் ஸித்திக்காது. பின்னும்,

देहोऽयमन्नभवनोऽन्नमयस्तुकोशो
ह्यन्नेनजीवति विनश्यति तद्विहीनः ।
त्वक्चर्ममांसरुधिरास्थि पुरीषराशि
र्नायं स्वयम्भवितुमर्हति नित्यशुद्धः ॥

அன்னம் முதலிய போஜ்யவஸ்துக்களைக் கொட்டுவதற்கு ஒருஸா தனமாயிருக்கும் இந்த தேகமானது அன்னமயமான கோசம். அன்னத்தால் ஜீவித்திருக்கின்றது. அன்னமில்லாவிடில் நாசத்தை யடைந்துவிடும். அதன் ஸ்வரூபத்தை ஆராய்ந்தால் தோல், மாம் ஸம், ரக்தம், எலும்பு, மலம் இவைகளின் கூட்டமாயிருக்கின்றது. இவ்வித நிலைமையிலுள்ள இந்த சரீரமானது எப்படி ஆத்மாவாக ஆகமுடியும்?

पूर्वं जनेरपि मृतेरथ नायमस्ति नैको जडश्च घटवत् परिदृश्यमानः ।

உண்டாவதற்கு முந்தியும், ஜனித்து மரணமடைந்த பிறகும் இந் தச் சரீரமில்லை. ஏகரூபமாயில்லாமலும், கடம்போல் ஜடமாகக் காணப்படும் இதை ஆன்மாவென்று கருதுவது தவறேயாகும். அன்னரஸமயன் என்று கீழ்க்காட்டிய சுருதியானது; மிகவும் மூடாத்மாக்கள் இவ்விதம் அபிப்பிராயப்படுகின்றார்கள் என்ப தைக்காட்ட வந்ததேயல்லாமல் சொந்த அபிப்பிராயமாகக் கூற வில்லை. இந்தசுருதிக்கு இவ்வித அபிப்பிராயத்தைச் சொல்லாவிட் டால் மேலுள்ள சுருதிகளுக்கு விரோதமாகும். நான் பெருத்தத வன், நான் இளைத்தவன் என்கிற அனுபவமும் சுத்தியில் ரஜதம் போல் தாதாத்மியாத்தியாஸத்தால் ஏற்படுகின்றது. அதுவும் அத்யந்த அக்ஞர்களுக்கே ஏற்படும். ஆகையால் இந்திரியங் களே ஆத்மா.

இந்திரியங்களில்லாவிட்டால் சரீரத்திற்கு அசைவு முதலிய ஒருகார்யமும் ஏற்படாது. மேலும் நான் குருடு, நான் செவிடு என்கிற அனுபவமுமிருக்கின்றது. இக்கருத்தையே,

बधिरोऽहं च काणोऽहं मूकइत्यनुभूतितः ।
इन्द्रियाणि भवन्त्यात्मा एषामस्त्यर्थवेदनम् ॥

நான் செவிடன், நான் குருடன், நான் மூகன் என்கிற அனுபவமிருப்பதாலும் வஸ்துக்களையறியும் சக்தியுள்ளவைகளாயிருப்பதாலும் இந்திரியங்களே ஆத்மா.

इन्द्रियाणां चेतनत्वं देहे प्राणाः प्रजापतिम् ।
एतमेत्येत्यूचुरिति श्रुत्यैव प्रतिपाद्यते ।
यतस्तस्मादिन्द्रियाणां युक्तमात्मत्वमिति ॥

சுருதியில் எல்லாப் பிராணன்களும் பிரஜாபதியிடம் சென்று இவ்விதம் கூறியனவென்று சொல்லியிருப்பதால் இந்திரியங்களுக்குச் சேதனத்வம் உண்டென்று தெரிகின்றது. ஆகையால் இந்திரியங்களை ஆன்மாவாகக் கூறலாம் என்று சார்வாகர்களுக்குள் சிலர் கருதுகின்றார்கள் என்று நம் பரமாசார்யாளும் வெளியிட்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஹிந்துமத தர்மம்.

)o(

(௬௨௭-வது பக்கத்தொடர்ச்சி)

பிராமணரல்லாதாருக்கும் பிராமணர்களுக்கும் சொல்லும் முக்கிய வார்த்தைகள்.

1. பிராமணர் அல்லாதவர்களே ஏராளமாய் கலாசாலைகளில் சேர்ந்து படிக்கும் விஷயத்தில் நீங்கள் ஏன் முயற்சிசெய்யக் கூடாது? அப்படி ஏராளமாய்ப்படிக்க நீங்கள் முயற்சி செய்து உத்யோகஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொள்ளும்பக்ஷத்தில் அதைத்தான் பிராம்மண்யத்தை முன்னுக்குக் கொண்டுவரும் க்ஷேமகாலமென்பதாய் நான் நினைத்திருக்கிறேன். அப்படி நீங்கள் செய்யாமலிருப்பதற்குக் காரணம் எல்லாம் கூடி அதிக கஷ்

டப்பட்டுப் படித்து பரீக்ஷைகொடுத்து உத்யோகத்தைச் சம்பாதிப்பதால் அடையும் பலனை விட இப்போது நீங்கள் கைப்பற்றி கொண்டிருக்கும் வியாபாரம், கைத்தொழில் முதலிய வேலைகளினால் லாபம் சம்பாதிப்பதானது அதிகம். சுளுவாயும் நிச்சயமாயும் அடிமை உணர்ச்சியில்லாததாயுமிருப்பதினாலேயே யென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. பரீக்ஷைவேண்டியிராத மற்ற உத்யோகங்களுக்காவது வேலைகளுக்காவது நீங்கள் ஏன் முன்னிட்டு வரக்கூடாது. சில நாளைக்குமுந்தி இந்தியன் டிபென்ஸ் போர்ஸ்ஸுக்கு எல்லாரும் சேரலாமென்று கவர்ன்மெண்டார் எல்லாரையும் வருந்தியழைத்தார்களே.

2. கனம் ஸர். பி. சிவஸ்வாமிய்யர் சொல்லியிருக்கிறபடி இந்த சென்னைராஜதானியில் டிபென்ஸ்போர்ஸில் சேரச்சம்மதித்து வந்த 1047 அப்ளிகேஷன் செய்தவர்களுக்குள் 550-க்கு மேல் பிராமணர்களென்றும், மற்ற 497-பேர்கள் பிராமணரல்லாத ஹிந்துக்கள், கிருஸ்துவர்கள், மகம்மதியர்கள் முதலிய யாவத் வகுப்பினர்களென்றும் தெரியவருகிறதே.

3. இவ்விதமாகவே திருச்சினாப்பள்ளியில் யுத்தப் பயிற்சி கற்றுக்கொள்ளவந்தபடி டிபென்ஸ் சேனையின் முதல் பாட்ச்சு 244-பேர்களில் 125-பேர் பிராமணர்களென்றும், மீதி 119-பேர் தான். மற்ற எல்லா ஜாதியார்களும் சேர்ந்த மொத்தமென்றும் தெரியவருகிறதே. கவர்ன்மெண்டார் பொதுவாய் எல்லா ஜாதியாரையும் வருந்தி அழைத்திருக்க, கூட்டம்கூடிச் சபைகளில் பேசும் பிராமணரல்லாதார்கள் யுத்தச்சேனை விஷயத்தில் தனது ஜனத்தொகைக்குத் தக்கபடி ஏன் ஏராளமாய் முன்வந்து சேரக்கூடாது. அவர்களல்லவோ தேகபுஷ்டி, சாப்பாடு சௌகரியம் முதலிய விஷயங்களில் மிலிட்டெரிச் சேனைக்குப் பிராமணர்களைவிட அதிகத்தகுதியுடையவர்கள். ஏன் அவர்கள் கிட்டி வந்த சமயத்தைக் கைவிடவேண்டும்.

4. இவைகளைக் கவனித்தால் ராஜாங்கபரிபாலனத்தில் க்ஷத்திரியர்களில்லாமையால் காலியாயிருக்கும் ஸ்தானங்களுக்கு பிராமணர்களே தங்களது நிலைமையிலிருந்து கீழிறங்கி வேலையை ஒப்புக்கொள்ளத் தகுதியுடையவர்களா யிருந்தார்களென்பது

வியக்தமாகிறது. மேற்படி ஸ்தானங்களுக்கு வைச்யர்களாவது சூத்திரர்களாவது கீழிருந்து மேலேறுவது அவ்வளவு சாத்திய மான காரியமில்லையென்பது வியக்தமாகிறது.

5. ஆனால் ஹிந்து மதத்தினுடைய அனுகூலத்தை யோஜிக்கும் விஷயத்தில் பிராமணர்கள் யுத்தச்சேனையில் சேருவதானது பிராம்மண்யத்திற்குக் குறைவு என்பதற்குச் சந்தேகமில்லை. ஸீவில் ஸர்விஸில் சேருவதாவது அவ்வளவுகுறைவையுண்டாக்க மாட்டாது.

6. ஆகையினுல்தான் பப்ளிக்ஸீவில் ஸர்விஸ் வேலையில் பிராமணர்கள் விஸ்தாரமாய்ச் சேர்ந்திருக்கிருர்கள். மேலும் வெகுகாலமாய் உபதேசம்செய்யும் தொழிலிலும், ஹிந்துராஜாக்களிடத்திலும், மற்ற முகம்மதிய ராஜாக்களிடத்திலும், ஆலோஜனைசொல்லும் மந்திரிஸ்தான வேலையிலும் அனுபோகமுள்ள பிராமணர்கள் B.A, L.T. பாஸ்செய்து எஜுகேஷன் டிபார்ட்மெண்டு காலேஜ் ஸ்கூல் உபாத்தியாயவேலைகளிலும், BA, BL. பாஸ்பண்ணி நியாயவாதிகளாகிற வைக்கீல் வேலைகளிலும் ஏராளமாகச்சேர்ந்திருக்கிருர்கள். அப்படிச் சேர்ந்திருப்பதை ஒரு பெரிய புகாராகக்கொண்டுவருவதானது எப்படி நியாயமாகும்.

7. மேலும் தத்காலம் பிராமணர்கள் வைக்கப்பட்டிருக்கும் நிலைமையையோஜிப்போம். பிராமணர்களுக்கு யக்ஞசாலைகளிலும், ராஜகோர்ட்டுகளிலும், சபைகளிலும் சாஸ்திரோக்தமான விர்த்தியினுல் காலக்ஷேபம் செய்வதும்போய் அறுப்புக் காலத்தில் நெல் வயல் கண்டுமுதல் களங்களில்போகவும் மதிப்பில்லாமல்போய் உடலில் உயிரிருக்கும்படி வயிறு வளர்க்கும் விஷயத்தில் ராஜாங்கத்தாரால் வேறுஎவ்வித உதவியும் கிடைக்காமல் தவித்துககொண்டிருக்கிருர்கள். இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போதுங்கூடப் பிராமணர்கள் ஜனங்களுடைய ஆத்மார்த்த க்ஷேம கைங்கரிய விஷயத்தில் மௌனமாயிருந்து கொண்டே பாடுபட வேண்டியதாயிருக்கிறது.

பிராமணர்களல்லாத சினேகிதர்களே பிராமணர்கள் இதைக் காட்டிலும் ஏராளமான லாபம் வரக்கூடியதாயிருக்கிற வேளாண்

மைத் தொழிலிலும் கடல் கடந்து வியாபாரம் செய்யும் தொழிலிலும் எல்லாவிதக் கைத்தொழில் வேலையிலும் பிரவேசிக்காமல் இதுவரையில் கொஞ்சம் விலகி நிற்கிறார்களே அதைக்கண்டு நீங்கள் சந்தோஷப்பட வேண்டுமல்லவா ?

9. உங்களது நன்மைக்கு இக்காலத்தில் யதார்த்தத்தில் விரோதிகள் யாரென்றால் பிராமண தேகத்துடன் ஜனித்து ஸோஷல் ரிபார்மர்கள் என்ற பேர் வைத்துக்கொண்டு பிராமணர்கள் கப்பல் யாத்திரை செய்யலாமென்றும் அவர்கள் கைத்தொழில் வேலைசெய்வது சாஸ்திர விரோதமில்லையென்றும் பலவிதமாய் வாதிக்கிறார்களே அவர்களல்லவா உங்களுக்குப்பெரிய சத்துருக்களாவார்கள்.

10. அப்படி ஸோஷல்ரிபார்மர்கள் செய்யும் முயற்சிகள் ஜயிக்கும் பக்ஷத்தில் பிராமணர்கள், நீங்கள் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கும் வியாபாரம் முதலிய லாபகரமான விருத்தியில் பிரவேசித்துவிட நேருமல்லவா ? அப்படி அந்தத் தொழில்களிலும் அவர்கள் போட்டிக்கு நுழைந்தார்களானால் உங்களுடைய பாடு இன்னம் விபரீதமான கேட்டையடையுமல்லவா?

11. ஆகையால் நீங்கள் ஸோஷல்ரிபார்மக்காரர்களுடன் சேராமல் வைதிகமதத்தைக் கைப்பிடிக்கும் பிராமணர்கள் விஷயத்தில் பிராமணரல்லாத நீங்கள் உண்மையான உதவிசெய்ய வேண்டும். அவர்கள் வைதிகமார்க்கங்களை நழுவ விடாமலிருக்கும்படியான முயற்சியில் நீங்கள் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும். அப்படி உதவிபுரிவது எல்லோருக்கும் க்ஷேமம்.

12. நான் சொல்லும் யதார்த்தத்தை ஆயாசப்படாமல் கிரஹித்து உங்கள் மனதில் தப்பெண்ணத்தினாலோ அல்லது பொறாமையினாலோ குடிகொண்டிருக்கும் வீணான கோணல் கொள்கையை நீக்கி ஸோஷல்ரிபார்மக்காரர்கள் தூண்டிவிடும் புத்தியைப் பாசாங்கென்று உணர்ந்து உண்மையானவைதீகமதக் கொள்கையைக்கைக்கொண்டிருக்கும் பிராமணர்களை உங்களுக்கு யதார்த்த சிநேகிதர்கள் என்று நம்பி அவர்களாலே தான் உங்களுக்கு இகத்திலும் பரத்திலும் ஜீவன் கடைத்தேறும்வழி கைகூடுமென்று எண்ணிக் கிரமமான மார்க்கத்தில் நடப்பீர்களாக,

13. பிராமண சிநேகிதர்களே பிராமணரல்லாதார் விஷயத்தில்நீங்கள் எப்போதும்நேசத்தோடேயே நடக்கவேண்டும். அவர்கள் தப்பபிப்பிராயத்தாலும் அல்லது குரோதத்தாலும் என்ன பிழைகள் செய்திருந்தாலுங்கூட அவைகளை மனதில் வைத்துப் பாராட்டக்கூடாதென்பது உங்களுக்கு ஏற்பட்ட தர்மமல்லவா? அவர்கள் உலகவாழ்க்கையில் க்ஷேமமடையும்படிக்கும் பரலோகத்திலும் க்ஷேமமடையும்படிக்கும் உண்மையான மத தர்மமார்க்கத்தை அவர்களுக்கு எடுத்துக்காட்டுவது உங்களுடைய பொருப்பான கடமையல்லவா? தங்களையறியாமலோ அல்லது வேறு தூண்டுதலாலோ அவர்கள் ஏதாவது பேசிவிட்டாலும்கூட நீங்கள் அதைப் பாராட்டக்கூடாது.

14. வீண் அறியாமையினுலே வைதிக வகுப்பென்றும் லௌகிகவகுப்பென்றும் பிராமணர்களாகிய உங்களுக்குள் இரண்டுவிதமான பேதமுண்டாய் விட்டது. பிராமணர்களிலேயே சிலர் தங்களுடைய புராதன குல ஆசாரத்தையும், பிராமண தர்மத்தையும் உதாசினம் செய்துவிட்டுத் தாங்கள் இந்த உலகத்தில் ஏன் ஜனித்தோமென்பதையும் தங்களுடைய ஆத்மா கிருதார்த்தம் அடையும் வழியையும் மறந்து ஹிந்துக்களல்லாதாருடைய கொள்கைகளையெல்லாம் யோஜியாது பின் தொடர்ந்து வைதிக ஹிந்துமதமென்பது எல்லாம் 'ஹம்பக்' என்றும் வைதிகப் பிராமணர்கள் உலகத்தில் ஜீவித்திருப்பது அனுவச்யமென்றும் உங்களைப்பார்த்து முகத்தெதிரே தூஷிப்பார்களேயானுல் அவ்வளவு தெரியாத பிராமணரல்லாத மற்றையோர்கள் உங்கள் பேரில் குற்றம்கூறி பகைத்துக்கொள்வது ஓர் ஆச்சர்யமாகுமா.

15. காலமிருக்கப்பட்ட ஸ்திதியைக் கவனித்து நீங்கள் என்ன செயயவேண்டுமோ அதைச் செய்யுங்கள். இந்தக் காலம் கூட்டம்கூடி வாது பேசுவோருக்குத்தான். ஒரு கக்ஷி என்ன சத்தியமாயும் நியாயமாயும் பொதுவாய் எல்லோருக்கும் நன்மை பயக்கும்படியாயும் இருந்தாலும்கூட அதைப்பற்றிப்பலர் ஒன்று கூடிப்பேசினுல்தான் காரியம் கைகூடுவதாயிருக்கிறது. உங்களில் பிராமணஸோஷல்ரிபார்மர்கள் உலகத்திற்குச்செய்யும்தீமையையும் அவர்கள் செய்யும் தப்புவழிகளால் உலகத்திற்கும் மதத்

திற்கும் எத்தனை கெடுதல்கள் உண்டாகுமென்பதை நன்றாய் ஜனங்களுக்கு எடுத்துக் கூறுவதில் நீங்கள் மிகவும் பாடுபட வேண்டும். அவர்கள் செய்யும் பிழைகளையும் அறியாமையையும் வீண் கக்ஷியையும் வெளியில் இழுத்துவிட்டு நம்முடைய பிராமணரல்லாத ஹிந்துக்களை வித்யாக்ஞானத்தால் போதித்து துன்மார்க்கக் கூட்டத்தினின்று அவர்களை விடுவித்து அவர்கள் மனது கொஞ்சம் கொஞ்சமாய் நல்வழியில் திரும்புமாறு நீங்கள் மிகவும் பாடுபட்டு உழைக்கவேண்டும்

16. மனுஷ்யாளைப்பற்றியும் பதார்த்தங்களைப்பற்றியும்மனதில் தப்பபிப்பிராயம் புகட்டப்பட்டிருக்கும் சிற்சில பிராமணரல்லாதாராகிய சினேகிதர்கள் விஷயத்தில் யதார்த்தம்இன்னதென்று பகுத்துணர்ந்திருக்கும் பிராமணர்களும் பிராமணரல்லாதவர்களில் மீதிப்பேர்களாகிய நீங்களும் என்ன செய்யவேண்டியதென்றால் அவர்கள்அநாரியர் என்ற மஹா இகழ்ச்சிக்குக்காரணமாகும் படுகுழியில் விழுந்து வீணாய்க்கெட்டுப்போகாமல் அவர்களைக் காப்பாற்றிவைப்பதில் நீங்கள் நிமிஷமேனும் தாமதிக்கக்கூடாது

17. அவர்களுக்கு நீங்கள் போதிக்கவேண்டியதென்னவென்றால் பிராமணர்கள் இந்த துஷ்காலத்தில் பிராமணகிருத்தியத்திலிருந்து நழுவியிருந்தாலும் உண்மையான வேதக்ஞானத்தையும் ஸம்ஸ்கிருதவித்பத்தியையும்கூடச் சிலர் தெரிந்துகொள்ளாதிருந்தாலும் மதம் விஷயத்தைப்பற்றினமட்டில் வேதமானது பிதாஸ்தானத்திலும் அஃது எழுதப்பட்டிருக்கும் ஸம்ஸ்கிருதபாஷையானதுமாதாஸ்தானத்திலும் உண்மையான வைதிகபிராமணன் மோக்ஷஇச்சையுள்ளவர்களுக்கெல்லாம் குருஸ்தானத்திலும் இருப்பதாயும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

18. அப்படி மூன்று அம்சமாய் இருப்பதென்பதற்குத் தமிழில் எழுதப்பட்டிருக்கும் அநேக உத்தமமானகிரந்தங்களே ஆதாரமாகும். அதையும் இப்போதைய ஸோஷல்ரிபார்மர்கள்பிராமணரல்லாதபக்தர்களால் போர்ஜரியாய்ச்சேர்க்கப்பட்ட நூதன ஆதாரங்கள் என்று அவநம்பிக்கைப்படுகிறார்களோ தெரியவில்லை. கண் கட்டப்பட்டிருக்கும் திராவிட சகோதரர்கள் மோக்ஷவிஷயமாய்ப் பாடுபடும் பெரிய ஆரியக் கும்பலில் தாங்களும் சேர்ந்த

வர்கள் தானென்று ஒரு தரம் எப்படியாவது தெரிந்து கொள்வார்களேயானால் தெய்வத்தன்மை வாய்ந்த வேத புருஷனான பிதாவினிடத்திலும் ஸம்ஸ்கிருத வித்வத்தாகிய தெய்வமாதாவினிடத்திலும் பிராமண ஆசாரியனாகிய பரிசுத்தமான குருவினிடத்திலும் விஞ்ஞானவிரோதம் பாராட்டும் தோஷத்தினால் கேடு வரவழைத்துக்கொள்ளமாட்டார்களென்பது நிச்சயம்.

19. ஆகையினால் அவர்களுக்கு அடிக்கடி எச்சரிக்கை செய்யுங்கள் அப்படிச் செய்யாவிடில் சத்கதியடையும் மார்க்கத்தில் உங்களுடன் கூடவே இதுவரையில் பாடுபட்டு வந்திருக்கும் தோழர்களுக்கு அபகாரம் செய்தவர்களாய் நீங்கள் ஆய்விடுவதுமல்லாமல் சத்கதிநாடுவதையே குறியாய்க் கைக்கொண்ட உங்களுடைய மதத்திற்கும் தேசத்திற்கும் கேடு சம்பவிக்கும்.

20. மேல் நாட்டார் ஐக்கிய சங்கத்திற்கும் ஹிந்துக்களின் ஐக்கியசங்கத்திற்கும் ஆதிமார்க்கங்களிலும் குறிப்பான கொள்கைகளிலும் சம்பந்தா சம்பந்தமே கிடையாது. இரண்டும் முற்றிலும் வேறேயாம். மேல் நாட்டார் ஆசரணையைப் பார்த்து அந்தப்படி நாமும் நடக்க ஆரம்பித்தால் அனர்த்தமே சம்பவிக்கும். ஒருகுலமானது அன்ய நாகரீகத்தோடு ஒன்றிப்போக இயலாவிட்டாலும் அல்லது மனது இல்லாவிட்டாலும் அத்துடன் சந்தித்துக்கொண்டிருப்பதுகூட அக்குலத்திற்கு க்ஷயத்தை உண்டாக்குமென்பது உண்மையே என்று (Myers) என்பவர் எழுதியிருக்கிறார். ஏனென்றால் அன்ய நாகரீகத்துடன் சேர்க்கையால் ஆத்மசம்பந்தமான பந்தங்கள் குறைந்து போகின்றன. ஆகையால் ஹிந்துக்களாகிய நாம் இழிவையும் கோழைத்தனத்தையும் உதரி எரிந்துவிட்டு தீரத்தையும் சௌரியத்தையும் கைக்கொண்டு ஸநாதன தர்மஆசார அனுஷ்டான முறையைக் கைப்பிடித்துநடந்து வந்தால் தான் நம்முடையஜன்மம்கடைத்தேறும்

21. பெரிய ஆரிய ஹிந்துக்களாகிய உங்களுக்கே இந்த சம்ஸாரபந்தத்திலிருந்து நிவர்த்தி செய்துகொள்ளும் தர்மாசரணையின் லாபத்தைப் பெறும்பாக்கியம் கிடைத்திருக்கின்றது. தர்மசாஸ்திரத்தின் விதாரணைகளை நீங்கள் அனுஷ்டிக்கவேண்டுமென்

பது உங்களுடைய நன்மைக்காகவே. அதை அனுஷ்டிப்பதானது முதலில் கொஞ்சம் சிரமம் கொடுப்பதுபோல் இருந்தாலும் பிறகு பெரிய நன்மையையளிக்கும். படித்து முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆசையால் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் படிப்பதில் எத்தனையோகஷ்டப்படவில்லையா? சாச்வதமான நன்மையை விடுத்துத் தத்காலத்திய சுகத்திற்கு விரும்பும் உள்ளில் விஷம் கலந்து மாதுரியமான பேச்சுப் பேசுகிறவர்களுடைய வார்த்தையை நம்பாதீர்கள்.

(தொடரும்)

ராவ்ஸாஹேப் எல். ஏ. ரெங்கசாமிஅய்யர்.

சண்டாளஜாதி தத்வ நிரூபணவிஷயமாய் வித்வான்களின் அபிப்பிராயங்கள்.

ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்காராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் கவிரத்நம் மஹோபதேசக பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேசசாஸ்திரியார் அவர்களால் செய்யப்பட்ட சண்டாளஜாதி தத்வநிரூபணம் என்னும் கிரந்தத்தைப்பார்த்தேன். ஸநாதன தர்மத்திற்கு மூலாதாரமான ஜாதிவிபாகங்களும், அவைகளுக்கேற்பட்ட அதிகாரம், தர்மம், இவைகளின் வியவஸ்தைகளும், அநாதிஸித்தமாயிருக்கும் ஆசாரமுறைகளும் லோககேக்ஷமத்திற்கு மிகவும் அவச்யமாயிருக்க கலிதோஷத்தினுல் இது விஷயத்தில் விபரீத புத்தியுள்ளவர்களுடைய துர்வாதங்களைப் பிரமாண நிரூபணங்களுடன் கண்டிக்கும் இந்தக் கிரந்தமானது எல்லாரும் அவசியம் பார்க்கவேண்டியதாயும் லோகோபகாரமாயும் இருக்குமென்று நான் நம்புகிறேன்.

மஹாமஹோபாத்தியாய பிர்மஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதாவர்களுடைய பௌத்திரரும் சிஷ்யருமான

மஹோபதேசக சாஸ்திரரத்நாகரம்
பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள்.
அத்வைதஸபா, பிரதானபண்டிதர்
டபீர்புதுத்தெரு, கும்பகோணம்.

श्रीशङ्करगुरुभ्यो नमः ॥

चिज्ज्योतिरेव जगदात्मतया चकास्ति तत्रास्ति कापि न भिदा परमार्थदृष्टेः । एषामथापि कुधियां क्व गता भिदेयमत्यन्तमात्महनने व्यवसायिनो ये ॥

ஞானஸ்வரூபமாய்விளங்கும் ஜ்யோதிஸ்தான் ஜகத்ஸ்வரூபமாய்ப் பிரகாசிக்கின்றது. உண்மையான ஆத்மஞானத்தையடைந்து ஸகல பேதங்களையும் அறவேயொழித்து ஒரே பரமாத்ம ஸ்வரூப மாய்ப்பார்க்கும் மஹான்களுக்கு ஒருவிதமான பேதமும் இல்லை. எவர்கள் ஆத்மஸ்வரூபத்தை ஹிம்ஸிப்பதில் மிகவும் முயற்சி யுடையவர்களோ அவ்வித அஞ்ஞானிகளுக்கு இந்தஜாதி பேத மானது எப்படி விலகும்?

प्रापञ्चिकव्यवहृता वियमन्तरङ्गमित्यादरेण महताऽस्मरतां मुनीनाम् ।
यस्त्वन्तरङ्गकुहरेशय आशयो यमद्धात्र सम्यगुपपादित इत्यवैमि ॥

பிரபஞ்ச வியவகாரத்திலிருப்பவர்களுக்கு வர்ணாச்ரமவிபாகமா னது மிகவும் அந்தரங்கம் என்று அதிக ஆதரவுடன் ஸ்மிருதி களில் வெளியிட்டவர்களான மஹரிஷிகளுடைய அந்தரங்கமான அபிப்பிராயங்கள் இந்த கிரந்தத்தில் நன்றாய் உபபாதனம் செய் யப்பட்டிருக்கின்றன என்பது என் அபிப்பிராயம்.

चण्डाळजातितत्त्वप्रतिपादननैपुणीं विदुषः ।
पञ्चापगेशनाम्नः प्रकटयतीदं प्रबन्धसद्रत्नम् ॥

பஞ்சாபகேசசாஸ்திரி என்று பெயர்வாய்ந்த வித்வானுக்கு சண் டாளஜாதியின் சாஸ்திரீயமான தர்மங்களைப் போதிப்பதில் இருக் கும் ஸாமர்த்தியத்தை சிரேஷ்டமான ரத்னம்போன்ற இந்த கிரந் தமானது வெளியிடுகின்றது.

कृष्णतटाकाभिजनः कृष्णो वेदान्तभूषणो विबुधः ।
स्वाशयबोधायादात् पत्रं पत्राधिपाय धर्माणाम् ॥

'கருங்குளகிராம வாஸிகளும் வேதாந்தபூஷணம் என்கிற பிருதம் பெற்றவர்களுமான கிருஷ்ணசாஸ்திரிகள் என்கிற வித்வான் ஆர்யதர்மம் பத்திராதிபருக்குத் தம்முடைய கருத்தைவெளியிடும் இந்த பத்திரிகையைக் கொடுத்தார்.

எனது நண்பரான கும்பகோணம் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் மஹோபதேசக கவிரத்னம் பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேசசாஸ்திரியார் அவர்களால் வெளியிடப்பெற்ற "சண்டாளஜாதி தத்வ நிரூபணம்" என்ற புஸ்தகத்தைக் கண்ணுற்றேன். அவர்கள் பெயருக்கேற்ப ஒவ்வொரு விஷயத்தையும் சுருதி, ஸ்மிருதி, யுக்தி அனுபவம் என்ற நான்கு முறையாக விசாரித்துச் "சண்டாள ஜாதி என்பது நான்கு வர்ணங்களுக்குப் புறம்பான ஐந்தாவது ஜாதியே. அது வேதம், ஸ்மிருதி முதலியவைகளிற் சொல்லப்பட்டதே, வேதத்தில் அதைப்பற்றிச் சொல்லப்படவேயில்லை என்ற சிலரின் கூற்று அபத்தமானதே" என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

இன்னும் 'ராஜீயவ்யவஹாரங்களுக்கும், வர்ணாச்ரமதர்மத்திற்கும் சம்பந்தமேயில்லை' என்றும், 'தீண்டாமை என்பது அதிக அவசியமானது, அது நமக்குள்ளேயே சிற்சிலகாலங்களில் இருக்கிறது' என்றும் நன்குவிளக்கியிருக்கிறார்கள். ராஜீயவாதிகளில் சிலரும் இதை அங்கீகரிக்கின்றனர். இது நிற்க, தற்காலம் மேல்நாட்டு நாகரீகத்திலீடுபட்டு நமது நாட்டுக்கலைகளையும் நூல்களையும் நன்கு பயிலாது அயல் நாட்டினரால் தங்கள் புத்திக்கெட்டியவாறு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களைப்படித்து இது இல்லை, இது பிசகு" என்று கண்டவாறு எழுதவும், உபன்யாசம் செய்யவும் சிலர் கிளம்பிவிட்டனர்.

முன்னாளில் 'வேனன்' என்ற ஒருவனாலேயே 'வர்ணஸங்கரம்' செய்யப்பட்ட இந்நாடு மிகுதியும் கலக்கமுற்றது. இப்பொழுதோ அவனைப்போல் அனேகர் கிளம்பித்தங்களைக் கெடுத்துக்கொண்டதும் அல்லாமல் பிறரையும் கெடுக்க முயலுகின்றனர். அந்தோ! பரிதாபம்! இது கலியின் கொடுமையேயன்றி

வேறன்று, ஆகையால் ஆஸ்திகர்களும் பாமரஜனங்களும் அவர்களுடைய மாயவலையில் விழாது தாய்ப் பாஷையில் எளிய நடையில் பாமரஜனங்களும் ஐயந்திரிபற அறியும்படி வெளியிடப்பட்ட இந்தப் புஸ்தகத்தைப்படித்து ஸந்தேகந்தீர்த்துக் கொள்ளுவார்களென்று நினைக்கிறேன். பிர்மஸ்ரீ சாஸ்திரி அவர்கள் அத்யந்த லோகோபகாரமானதும் தனது ஸோதரரான பிர்மஸ்ரீ வேதாந்த கேஸரீ மஹாமஹோபாத்தியாய கணபதிசாஸ்திரியள் அவர்களால் எழுதப்பட்டதுமான வயோநிர்ணயம் என்ற நூலுக்குத் தான் ஒரு வியாக்கியானத்தையும் ஜாதிநிர்ணயம் என்கிற ஒரு கிரந்தத்தையும் இயற்றி வெளியிட்டிருக்கின்றார். இன்னும் இது போன்ற அவசியமான நமதுமததத்வங்கள் நிறைந்த புஸ்தகங்களை அடிக்கடி வெளியிடவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு ஆஸ்திகர்களும் இவ்வித விஷயத்தில் ஊக்கமெடுத்துக்கொண்டு அன்னாருக்கு உதவிபுரிய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மஹாமஹோபாத்தியாய
சி. தண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர்,
பிரின்ஸ்பல்
ஸ்ரீ மீனாக்ஷிஸம்ஸ்கிருதகாலேஜ், சிதம்பரம்.

ஸ்ரீமான் "கவிரத்நம்" பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் எழுதிய "சண்டாளஜாதி தத்த நிரூபணம்" என்ற கிரந்தத்தை அடிமுதல் நுனிவரைப் பார்த்து அடங்கா மகிழ்ச்சி அடைந்தேன். தென்னாட்டுச் சிறந்த பண்டிதர்களுள் ஒருவராகிய நம் சாஸ்திரியார் தமக்குள்ள தர்மசாஸ்திர பாண்டித்யத்தையும் யுக்திவல்லமையையும் இந்நூலில் நன்கு வெளிப்படுத்தியிருக்கின்றார். தர்மசாஸ்திரங்களின் கருத்தை அறியாமல் தத்தமக்குத் தோன்றிய சில போலி யுக்திகளைக் கூறிக்கொண்டும், தேச முன்னேற்றம் என்ற சொல்லைச்சொல்லிப் பலரையும் மயங்கச் செய்துகொண்டும் ஆங்காங்குச் சுற்றித்திரியும் கலிகால தர்மசாஸ்திரிகள் மலிந்து வரும் இந்நாளில், இவ்வண்ணம் மஹர்ஷிகளுடைய கொள்கைகளையும் ஜாதிகளின் வியவஸ்தையையும் பிரமாணங்களுடன் எடுத்துக்காட்டும் இத்தகைய நூலை நம் சாஸ்தியார் வெளியிட்டதற்

காக உண்மைப் பாரதபுத்திரர்கள் அன்னாரிடம் மிகவும் நன்றி யறிவுள்ளவராய் இருக்கவேண்டும். ஜாதி கர்மாநுகுணமாக வருகின்றதென்பதையும், அந்தந்த ஜாதிக்கேற்ற தருமங்களைச்செய்து அவரவர் முக்திபெறலாமென்பதையும், நான்கு ஜாதிக்குப் புறம்பாக சண்டாள ஜாதி என்று ஒரு ஜாதி உண்டென்பதையும் சாஸ்திரியார் வெகு அழகாகப் பிரமாணங்களைக் காட்டி ஸ்தாபித்திருக்கின்றார். இந்நூலிலுள்ள "யுக்தி விசாரம்" என்னும் பாகம் தலைசிறந்து விளங்குகின்றது. மற்றவர் சொல்லும் நான்கு பயன்களில் ஒவ்வொன்றையும் யுக்தியால் விசாரித்து, அதன் பொருந்தாமையைத் திடம்படக் காட்டியிருக்கும் பான்மையைப் பார்க்க என் மனம் குதூஹலிக்கின்றது. மஹாத்மாவைப்பற்றி சாஸ்திரியார் கொண்ட கருத்துத்தான் எனக்கும் நெடுநாளாக இருந்துவருகிறது. இந்தப்புஸ்தகத்தைநன்றாகப்படித்துப்பார்ப்பின் மஹாத்மாஜியும், அவருடைய உண்மைச் சிஷ்யர்களும் மனமாறுதல் அடைவார்களென்பது எனது துணிவு. இந்நூல் முதலில் இங்கிலீஷிலும் பிறகு பல தேசபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டால், ஆஸ்திகர்களெல்லார்க்கும் இது பெரிதும் உபகாரமாயிருக்குமாகையால், அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு சாஸ்திரியார் அவர்களையும், மற்றைத் தேசாபிமானிகளையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அபிநவ பட்ட பாண
ரா. வே. கிருஷ்ணமாசாரியார்,
ஸம்ஸ்கிருத பண்டிதர்,
ராஜாங்கக் கலாசாலை, கும்பகோணம்.

கும்பகோணம்,
6—8—25.

ரஸமஞ்சரி.

நடுக்காவேரி ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளுக்கு பிறகு ப்ர்மவித்தையின் பெருமையைத் தமிழ்தேசத்தில் பிரசாரஞ்செய்யும் பத்ரிகை இல்லாமலிருந்தது. அந்தப் பெருங்குறையை 'ஆர்யதர்மம்' நிவர்த்தி செய்துவிட்டது. கடந்த 8 வருஷங்களுக்குள் ஆர்யதர்மம் செய்திருக்கின்ற மஹோபதேசங்களை எல்லோரும் போற்

றுவார்கள். தமிழ்நாட்டு ஆங்கில கலாசாலே மாணவர்களும் ஆர்ய தர்மத்தைப் படித்துவந்தால் அவர்களின் பிற்கால வாழ்வு இந்த தேசத்தில் ஓங்கிவிளங்கும். வித்யா ஸ்தானங்களிலுள்ள ஆர்ய தர்மாபிமானிகள் இதனே ஆலோசிக்கவேண்டும்.

இந்தியாவில் 75 லக்ஷம் பிராமணர்களிருக்கின்றதாக ஜன கணிதம் தெரிவிக்கின்றது. இவர்களுக்குள் ச்ருதிஸித்தமான மதா பிமானிகள் தாராளமாக இருக்கத்தான்வேண்டும். எனவே சில மஹா புருஷர்கள் முன்வந்து திராவிட மண்டலத்திலும் இதர பாகங்களிலும் ப்ராமணர்களுக்குள் ஒரு ஐக்யம் உண்டாகுமாறு வேலேசெய்யவேண்டும்.

சதுர்த்த வர்ணத்தாரில் ஒரு பகுதியார் தாங்கள் இன்ன இன்ன அகாரியங்கள் செய்வதில்லேயென்றும், அந்தக் கட்டுப் பாட்டை நீடித்து நிறைவேற்றுவதற்காக தலேக்கட்டு 1-க்கு ஒரு ரூபா வீதம் கொடுப்பதென்றும் தீர்மானித்துக்கொண்டு சில ஸத் கார்யஞ் செய்வதை நாமறிவோம். வேறொரு பகுதியார் தங்க ளுக்கு தேவாலயப்பிரவேசம் (உயர்ந்தஜாதி இந்துக்களேப்போல்) சமமாகக் கிடைக்கவேண்டுமென்றும், அதுபோன்ற அபீஷ்டங் கள் ஸித்தித்துத் தம் ஜாதி கௌரவமாக வாழவேண்டுமென்றும், அதற்காக ஒருகோடி ரூபாய் வசூல் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்துத் தீவிரப்ரயத்நமுஞ் செய்துவருகின்றனர். ஆகவே, ப்ராமண ஜாதிக்குள் வித்யா, தனம், சக்தி மூன்றும் செழித்து ஓங்குமாறு செய்ய ஒரு ஸேவா ஸங்கம் ஏற்பட்டால் எவ்வளவு உதவியாகும் ?

எனங்குடியில் நடந்த வர்ணாச்ரம கான்பரன்ஸில் தீர்மானங் கள் செய்ததோடு வர்ணாச்ரம கான்பரன்ஸும் ஓய்வு எடுத்துக் கொண்டதென்றே சொல்லவேண்டும். பிறகு மதுரை முதலிய இடங்களில் நடந்த கான்பரன்ஸ் ஊக்கமாக வேலே செய்யவில்லே.

ஸ்ரீ ஜாநகீஜாநி.